Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 59
திங்கட்கிழமை
24 ஜனவரி 2022
தை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 838 |
| மொத்தம் | 6,01,886 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 15 |
| மொத்தம் | 15,299 |

# அரசு திருந்தாவிடில் நாட்டுக்குப் பேரழிவு!

## அரசாங்கத்தை எச்சரிக்கிறது சுதந்திரக் கட்சி
## இந்தியா – தமிழர் நெருக்கம் சாதாரண விடயமல்ல என்றும் சுட்டிகாட்டு

**கொழும்பு, ஜனவரி 24**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தக் கோரியும், 1987ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தியும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக இந்தியாவை நாடியதை சாதாரண விடயமாகக் கருத முடியாது. இனியும் அரசு தவறான கொள்கையுடன் பயணித்தால் ஒட்டுமொத்த நாடும் பாதாளத்தில் விழும். இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.**

15 ▶

## பூஸ்டர் தடுப்பூசி செலுத்த 31 முதல் தடுப்பூசி வாரம்!

யாழ்ப்பாணம், ஜன.24

பூஸ்டர் தடுப்பூசியை அனைவரும் ஏற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் ஒரு முடக்க நிலைமையை நோக்கிச் செல்ல நேரிடலாம். பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வசதியாக எதிர்வரும் 31ஆம் திகதி முதல் தடுப்பூசி வாரம் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.

15 ▶

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன.24

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுப் பிற்பகல் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியில் வைத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞரிடம்

15 ▶

## தமிழரின் பிரச்சினை தீராமல் முன்னோக்கிச் செல்லாது நாடு

### மக்கள் விடுதலை முன்னணி கணிப்பு

கொழும்பு, ஜன.24

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும்.

15 ▶



**முச்சந்தி முரளி**






## பிள்ளையார் மாயம்!

வவுனியா, ஜன.24

வவுனியா, இலுப்பையடிப் பிரதேசத்தில் நீண்டகாலம் வழிபட்டு வந்த பிள்ளையார் சிலை ஒன்று காணாமற் போயுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இலுப்பையடிப் பிரதேசத்தில் இலுப்பை மரத்தின் கீழ் சிறிய கொட்டகையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இந்தப் பிள்ளையார் சிலை மக்களால் நீண்ட காலமாக வழிபடப்பட்டு வந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. வர்த்த

15 ▶

## இன்றுமுதல் ‘கரண்ட் கட்’!

கொழும்பு, ஜன.24

இன்று திங்கட்கிழமை ஒரு மணிநேரமும், நாளை செவ்வாய்க்கிழமை முதல் சுமார் 2 மணி நேரமும் மின் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 4 மணி நேரம் மின் துண்டிப்பு ஏற்படக்கூடும் என்று இலங்கை மின்சார சபைத் தகவல்கள்

15 ▶

## முன்னாள் செயலாளர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.24

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமுமான மருத்துவர் அதுல கஹந்தலியனகே நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர

15 ▶

## மக்களின் மானத்தை விற்றுவிட்டது அரசு!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.24

நாட்டு மக்களின் மானத்தையும், நாட்டையும் அற்ப விலைக்குக் காட்டிக்கொடுத்த அரசாங்கம் இது. வீரம், தேசபக்தி என்று தம்பட்டம் அடிக்கும் அரசாங்கம் இந்த நாட்டு மக்களின் சுயமரி

15 ▶

## பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாதாம்

கொழும்பு, ஜன.24

நாட்டில் பால் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால்மா இறக்குமதியாளர்களுக்கு

15 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விடுவதற்குத் தீர்மானம்

**கொழும்பு, ஜன. 24**

**தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை ஏலத்தில் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை கடற்படை பறிமுதல் செய்து வருகின்றது. இதற்கமைய 105 கடற்கலன்கள் அரசுடமையாக்கப்பட்டு தொடர்ச்சியாக 5 நாள்கள் பகிரங்க ஏலத்திற்கு விடப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த ஏலம் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி ஆரம்பித்துத் தொடர்ச்சியாக 5 நாள்கள் நடைபெறும். 7ஆம் திகதி யாழ்ப்பாணம், காரைநகரில் 65 படகுகளையும், 8ஆம் திகதி காங்கேசன்துறையில் 5 படகுகளையும், 9ஆம் திகதி கிராஞ்சியில் 24 படகுகளையும், 10ஆம் திகதி தலைமன்னாரில் 9 படகுகளையும், மார்ச் 1 ஆம் திகதி கற்பிட்டியில் 2 படகுகளையும் ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)



## இலங்கைக்கான அமெ. தூதர் பெப்ரவரியில் கடமையேற்பார்

கொழும்பு, ஜன. 24

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சங் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்து தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவராக ஜூலி சங்கை நியமிக்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி பரிந்துரை செய்திருந்தார்.

அதன்பின்னர் அவர் தனது சமர்ப்பணங்களை செனட் சபையில் செய்திருந்தார். இதனையடுத்து கடந்த டிசம்பர் 20ஆம் திகதி அமெரிக்க செனட் சபையினால் அவருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பெரமுனவுக்குப் போட்டியாக

# பத்தரமுல்லயில் அலுவலகம் சந்திரிகா பரபரப்பு வியூகம்!

கொழும்பு, ஜன. 24

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகம் அமைந்துள்ள பத்தரமுல்லயில் தனது கட்சியின் அலுவலகத்தை அமைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தீர்மானித்துள்ளார். இந்த நகர்வில் சந்திரிகாவுடன், குமார வெல்கமவும் இணைந்து செயற்படுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




## இந்த மாத இறுதிக்குள்

# புதிய அரசமைப்பு வரைவு ஜனாதிபதிக்கு கையளிப்பு

## நிபுணர்குழு திட்டம்

கொழும்பு, ஜன. 24

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது, அரசமைப்பு உருவாக்கத்துக்கான வரைபை இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்ட இந்தக்குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைவராக உள்ளதோடு, ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, ஜனாதிபதி சட்டத்தரணி நசீமா கமுர்தீன், கலாநிதி சர்வேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி சமந்த ரத்வத்த, ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த செனவிரத்ன, ஜனாதிபதி சட்டத்தரணி ஜி.எல். பீரிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன ஏப்ரலில் புதிய அரசியலமைப்புக்கான வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சுகிர்தராஜனின் நினைவு இன்று



மட்டக்களப்பு, ஜன. 24

கடந்த 2006ஆம் ஆண்டு திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றிலில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் இன்று காலை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு- கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இந்த ஞாபகார்த்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளையும் பங்குகொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# காலாவதியான சிகிச்சையால் காயங்கள் குணமாகாது

## அரசின் திட்டங்களை விளாசுகின்றார் சஜித்

கொழும்பு, ஜன. 24

பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு சீழ் வடியும் காயமாக மாறியுள்ள நாட்டை குணப்படுத்த சம்பிரதாய வேலைத்திட்டம் ஒருபோதும் ஒத்துவராது - என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: சமூக ஜனநாயக முறைமையின் பிரகாரம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். மிகவும் யதார்த்த பொது வேலைத்திட்டத்தின் தேவைப்பாட்டை முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்கு நான் உணர்ந்துள்ளேன்.

குறித்த பொது வேலைத்திட்டம் யதார்த்தபூர்வமாக இருப்பதுடன் தினந்தோறும் கலந்துரையாடலுக்கு உட்படக்கூடிய நேர்மையானதாக இருக்க வேண்டும்.

எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பான தற்போதைய கருத்துக்கள் யதார்த்தபூர்வமற்றவை.

வருமான பற்றாக்குறை மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், வருமான பற்றாக்குறையை மறந்து பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியது - என்றார். (ம)





யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகமும் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ஓ-4)

படங்கள்: ஐ.சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜனவரி நினைவேந்தல்

கொழும்பு, ஜன. 24

**தமது உயிர் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்யும் முகமாக ஊடக தொழிற்றுறையில் ஈடுபடுகையில் பல்வேறு வன்முறைகளை எதிர்கொண்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டக்கோரி, அழுத்தம் கொடுக்கும் வகையில் வருடாந்தம் ஏற்பாடுசெய்யப்படும் 'கறுப்பு ஜனவரி நினைவேந்தல் நிகழ்வு' இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் நடத்தப்படவுள்ளது.**

'படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, தாக்கப்பட்ட மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டுங்கள்' என்பதே இந்த வருடத்துக்கான கறுப்பு ஜனவரியின் தொனிப்பொருளாகும்.

ஜனவரி மாதம் 28ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாகவும் ஜனவரி 31ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்பை நடத்துவதற்கும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது. (ம)



## முல்லைத்தீவில் கஜமுத்தை விற்பதற்கு முயன்றவர் கைதானார்

முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கஜமுத்தை விற்பனைக்காகக் கொண்டுவந்த நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-19)

## விண்ணப்ப காலம் நீடிப்பு

கொழும்பு,ஜன.24

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித்திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ www.doenets.lk என் இணையத்தின் ஊடாக அல்லது உத்தியோகபூர்வ தொலைபேசி செயலி ஊடாகவும் விண்ணபங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

அதேவேளை பாடசாலை பரீட்சார்த்திகள் தங்களின் விண்ணப்பங்களை அதிபர்கள் அறிவுறுத்தியவாறு சமர்ப்பிக்க வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-4,இ)

## புளியம்பொக்கணை பகுதியில் நபரொருவர் மீது வாள்வெட்டு!

கிளிநொச்சி, ஜன. 24

மனிதநேய கண்ணிவெடிப் பிரிவில் பணிபுரிபவர் ஒருவர் நேற்றுக்காலை தனது தொழில் நிமித்தம் சென்றுகொண்டிருந்த போது, அவர் மீது ஆறு பேர் அடங்கிய குழுவால் சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாள்வெட்டுக் காயங்களுக்கு உள்ளானவர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பின்னர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, அதன் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-113)

## நெல் பயிரிட முடியாத நிலங்களில் பச்சைப்பயறு

### அரசு திட்டம்

கொழும்பு, ஜன. 24

நெல் பயிரிட முடியாத நிலங்களில், இடைப்போகத்தில் மேலதிகப் பயிராக பச்சைப்பயறு பயிர்ச் செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்க அரசு எதிர்பார்க்கிறது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணித்த போது கிடைத்த தகவல்களைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

நீர்ப்பாசன வசதிகள் இன்மையால், சிறுபோகத்தில் நெல் பயிரிட முடியாத நிலங்களில் இடைப்போகத்தின் மேலதிக பயிராகப் பச்சைப்பயறு பயிரிடுவதற்கு அவசியமான விதைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகளுக்கு நிதியுதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி, விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ-இ)

## ஓடுபிரித்து வீட்டுக்குள் இறங்கி பெருந்தொகைப் பணம் திருட்டு!

### முள்ளியவளையில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீடொன்றுக்குள் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டின் குடும்பத் தலைவி புலைமைப் பரிசில் பரீட்சைக்காக மகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். குடும்பத் தலைவர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு எவரும் வீட்டில் இல்லாத தருணமே மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவில் அண்மைய நாள்களாக திருட்டுகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-19)




தலைவர்மார் எப்பிடி நடக்கினமோ அப்பிடித்தானே அவையின்ர வாலுகளும் நடப்பினம் எண்டதுக்கு உதாரணம் சொல்லுற மாதிரி யாழ்ப்பாணம் அராலிப் பக்கம் ஒரு சம்பவம் நடந்திருக்கு.

கணவனால கைவிடப்பட்ட ஒரு பெண்ணைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பமொண்டு அராலியில இருக்கு. சீவியத்துக்கே அந்தக் குடும்பத்துக்கு கஷ்டம். இப்பிடி அந்தக் குடும்பம் கஷ்டப்படுறதை ஒரு யூரியூப்காரர் வீடியோ எடுத்து போட்டவை. அந்தவீடியோவைப் பார்த்த வெளிநாட்டில உள்ள ஒருத்தர், பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு உதவி செய்ய நினைச்சிருக்கிறார். அதால அந்த வீடியோவைப் போட்ட யூரியூப்காரருக்கு காசை அனுப்பி, அந்தக் குடும்பத்துக்கு குடுக்கச் சொன்னார். இப்பிடி யூரியூப்பில வீடியோ போட்டதைப் பார்த்து ஒருத்தர் உதவி செய்யப் போறார் எண்ட விசயம், அந்தப் பெண் தலைமைத்துவக் குடும்பத்தின்ர சொந்தக்காரரான ஒரு பிரதேசசபை உறுப்பினருக்கு தெரியவந்திச்சு. அவர் 'ஆரோ குடுக்கிற சாமானையெல்லாம் ஆட்டையைப் போட்டு தங்கட சாமான்' எண்டு குடுத்த கட்சியைச் சேர்ந்த உறுப்பினர். அப்ப சும்மா இருப்பாரோ. தன்ர கட்சிக்குணத்தைக் காட்ட வெளிக்கிட்டுட்டார்.

அந்த யூரியூப்காரரிட்ட போய், உதவி செய்ய வந்த காசை தான் குடுக்கிறன் எண்டு வேண்டி, அதில கொஞ்சக் காசை மட்டும் அந்தக் குடும்பத்துக்கு குடுத்திருக்கிறார். 'மிச்சக்காசை ஏன் குடுக்கேலை?' எண்டு அந்த யூரியூப்காரர் கேக்க, 'அவையை விடவும் கஷ்டப்பட்ட வேற ஆக்களுக்கும் உதவி செய்யோணும்.அப்பிடித்தான் உந்தக் காசை அனுப்பினவர் சொன்னவர். அதாலதான் மிச்சக் காசை வைச்சிருக்கிறன்' எண்டு பெரிய வள்ளல் மாதிரி கதையடிச்சிருக்கிறார். உடனேயே "இந்தப் பிரதேச சபை உறுப்பினர் இப்பிடிச் சொல்லுறது உண்மையோ?" எண்டு காசை அனுப்பின வெளிநாட்டுக்காரரிட்ட, யூரியூப்காரர் கேட்டிருக்கிறார். அதைக் கேட்டவுடன காசை அனுப்பினவருக்கு வந்திச்சே கோபம். 'அப்பிடி ஒண்டும் நான் சொல்லேலை. பொறுங்கோ ஆளைக் கேக்கிறன்' எண்டு, அந்த ஆட்டையைப் போட்ட உறுப்பினருக்கு போன் பண்ணியிருக்கிறார். அப்ப அந்த உறுப்பினர் மிச்சக்காசு தன்னட்ட இல்லை எண்டு கதையை மாத்த வெளிக்கிட்டு இருக்கிறார். ஆனாலும் வெளிநாட்டுக்காரர் சில ஆதாரங்களை அவருக்கு அனுப்பி கேட்ட பிறகுதான், உதவி செய்ய அனுப்பின காசில ஒரு பகுதியை தான் சுருட்டினதை ஒத்துக்கொண்டு, அந்தப் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு அதைக் கொண்டு போய் கெதியில குடுக்கிறன் எண்டு பணிஞ்சு கதைச்சிருக்கிறார்.

ஆனால், அப்பிடி வாயால சொன்னதோட சரியாம். அந்த மிச்சக்காசு போனது, போனதுதானாம். அந்தப் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பிறகு ஒரு சல்லிக்காசு கூடக் குடுக்கேலையாம். இப்பவும் உத்தமர் மாதிரி திரியிறாராம். ஏழைகளுக்கு வந்த காசைச் சுருட்டின பிரதேசசபை உறுப்பினர். போதாக்குறைக்கு ஆள் சமாதான நீதிவான் வேறையாம். இப்பிடியான ஆக்களால சமாதான நீதிவான் பதவிக்கும் இருந்த மரியாதை காத்திலையெல்லோ பறக்குது.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் கொள்வனவுக்கு ஒரு பகுதி நிதியை ஒதுக்குக!

## மின்சக்தி அமைச்சு கோரிக்கை



**கொழும்பு, ஜன. 24**

**எரிபொருள் கொள்வனவுக்காக இந்திய நிதியுதவியில் ஒரு பகுதியை தமது அமைச்சுக்கு ஒதுக்குமாறு மின்சக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. எரிபொருள் வழங்கல் தொடர்பாக இலங்கை மின்சாரசபை, எரிசக்தி அமைச்சுக்களுக்கு இடையில் கருத்துமோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அண்மையில், மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு அமெரிக்க டொலரைக் கண்டுபிடிக்குமாறு மின்சாரசபை யிடம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருந்தது.

இந்தப் பின்னணியில், இலங்கையின் எரிபொருள் தேவையை நிறைவேற்ற இந்தியா வழங்கும் 500 மில்லியன் டொலர் அவசர கடனுதவி தொகையில், ஒரு பகுதியை மின்சக்தி அமைச்சு கோரியுள்ளது.

மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், நெருக்கடியைச் சமாளிக்க குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு எரிபொருள் வாங்குவதற்கு இந்தியப் பணத்தின் ஒரு பகுதியை ஒதுக்குமாறு கோரியுள்ளோம். தடையின்றி மின்சார விநியோகத்தை பேணுவதற்கு இலங்கைமின்சாரசபைக்கு மாதம் ஒன்றுக்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருள் தேவைப்படுகின்றது - என்றார். (ம)

# நாசகாரச் செயலில் தொழிற்சங்கத்தினர்

## பணிப்பாளர் பதவி விலகல்

கொழும்பு.ஜன.24

நாசகாரச் செயல்களில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினர் மீது உரிய விசாரணைகள் ஆரம்பிக்குமாறு கோரி, தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஷர்மிளா ராஜபக்ச பணியிலிருந்து விலகியுள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளும் ஊழியர்களால், மிருகக்காட்சிசாலையிலுள்ள விலங்குகளுக்கு மாத்திரமின்றி, பணிபுரியும் ஊழியர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மிருகங்களை வேறு கூடுகளில் மாற்றிவிடுவதும், மின் இணைப்புகளை மாற்றுவதுமாக பல்வேறு நாசகாரச் செயற்பாடுகளில் குறித்த தொழிற்சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

தங்களின் மோசடிச் செயற்பாடுகளை மறைப்பதற்காக பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டு, திணைக்களத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இது தொடர்பில் உரிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்வரை 14 நாள்கள் பணியிலிருந்து விலகுகின்றேன். விசாரணைகள் ஆரம்பிக்கப்படாவிடின், 14 நாள்களின் பின்னர் பதவியை இராஜினாமா செய்யவும் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4.இ)

யாழ்ப்பாணம் உட்பட

# 4 மாவட்டங்களில் வளி மாசடைதல் அதி உச்சம்

கொழும்பு.ஜன.24

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பிரதான நான்கு மாவட்டங்களில், வளி மாசடைதல் அதிகரித்துள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

மின்னுற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், மின்பிறப்பாக்கிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதாலும் வளி மாசடைதல் அதிகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-4இ)

# அடிக்கடி மின்வெட்டு உணவகங்கள் பாதிப்பு

## சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் விசனம்

கொழும்பு.ஜன.24

தற்போது திடீரென மின்சாரம் தடைப்படுவதால், உணவகங்களுக்கு பெரிதும் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவிக்கையில், மாலை 6 மணி முதல் 7.30 மணி வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் போது, வாடிக்கையாளர்களின் வருகை குறைந்துள்ளது. சிறிய அளவிலான சிற்றுண்டிச்சாலை மற்றும் கடை உரிமையாளர்களின் தினசரி வருமானம் குறைந்துள்ளது. தற்போதைய போக்குத் தொடர்ந்தால் அவர்கள் வணிக நடவடிக்கைகளை நிறுத்த நேரிடும். மின்வெட்டுக் காரணமாக பால் பொருள்கள் மற்றும் இறைச்சிப் பொருள்களை நிலையான வெப்பநிலையில் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்க முடியவில்லை. இதனால் பெருமளவிலான உணவுப் பொருள்களும் பழுதடைகின்றன-என்றார். (ஒ-4.இ)

# வீதியில் கழிவுகள் மக்கள் அந்தரிப்பு

கிளிநொச்சி, ஜன. 24

பரந்தன் ஊடாக பூநகரி செல்லும் பிரதான வீதியில் குஞ்சுப்பரந்தன் தொடக்கம் குடமுருட்டி பாலம் வரையான வீதியின் இரு மருங்கிலும் கழிவுகள் காணப்படுவதால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாளாந்தம் பயன்படுத்தப்படும் மக்களின் கழிவுகள், சிகை அலங்காரக் கழிவுகள், முதியவர்களின் கழிவுகள், உணவுக் கழிவுகள் என பல்வேறு கழிவுகள் வீதியின் இருமருங்கிலும் கொட்டப்படுவதால் வீதியில் பயணிக்கின்ற மக்கள் பெருமளவில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி1.113)



# தரம் 5 புலமைப் பரீட்சையால் மாணவர்களுக்கு உளத்தாக்கம்

கொழும்பு,ஜன.24

நாட்டில் கொரோனாத் தொற்றால், பலமுறை பிற்போடப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரீட்சைக்கு நேற்றுமுன்தினம் தோற்றிய பல மாணவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சைக்கு முகம் கொடுத்த மாணவர்கள் பலர் கண்ணீருடன், பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெலிமடை கல்வி வலயத்துக்குட்பட்ட விஜயா கல்லூரியில் வினாத்தாள்கள் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை .

உரிய நேரத்தில் விடைத்தாள்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் பரீட்சை மண்டபத்தை விட்டு கண்ணீருடன் வெளியேறியுள்ளனர்.

சில மாணவர்கள் விடை எழுதிக் கொண்டிருக்கும் போதே, விடைத்தாள்கள் மேற்பார்வையாளர்களால் பறித்தெடுக்கப்பட்டுள்ளன. மேலதிக தாள் கேட்ட மாணவர்களையும் திட்டியுள்ளனர்.

இதற்கு நீதி கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். சுமார் 150 மாணவர்கள் இந்த நிலைமைக்கு முகம் கொடுக்க நேரிட்டது என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ஒ-4,இ)

# தங்க நகைகளுடன் பெண் கைது

கொழும்பு.ஜன.24

ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீர்வை வரியின்றி மோசடியான முறையில் இலங்கைக்கு தங்கத்தை கொண்டுவர முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் கண்டியைச் சேர்ந்த வர்த்தகர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரிடம் இருந்து 599 கிராம் 404 மில்லிகிராம் எடையுள்ள 6 தங்க மோதிரங்களும், 200 கிராம் 44 மில்லிகிராம் எடையுள்ள தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளன. (ஒ-4,இ)

# 'யாழ்.பாடி' மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையால் இந்த ஆண்டு வெளியிடப்படவுள்ள "யாழ் பாடி 6" என்ற மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

மலருக்கு கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல் நாடக எழுத்துரு, ஆய்வு (இலக்கிய, தொல்லியல், ஆன்மிகம், வரலாறு ) சூழலியல், சமூகவியல், கிராமிய கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் ஆகிய தலைப்பு களில் பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங்கண்டு பண்பாட்டு விழுமி யங்களை வெளிக் கொணரும் ஆக்கங்களாக அமைய வேண்டும்.

அத்துடன், ஆக்கங்களை கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது கணினியில் தட்டச்சு பதிப்பாகவே சமர்ப்பிக்க முடியும்.

கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் ஏ4 தாளின் இரு பக்கங்களுக்கு மேற்பட்டவையாக அமைந்திருத்தல் வேண்டும், சுய படைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதலாகாது.

ஆக்கங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை நடத்தாமல் ஆட்சியை நீடிக்கமாட்டோம்

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 24

**தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி அல்லது அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதில் ஆளும் கட்சிக்கு விருப்பமில்லை என அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு தனது பதவிக்காலத்தை நீடிக்கும் தீர்மானமில்லை. நாங்கள் உரிய நேரத்தில் தேர்தலை நடத்துவோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசியல் வரலாற்றில் தேர்தலை பிற்போடவோ அல்லது நீட்டிப்பதற்கோ எதிர்பார்ப்புகள் இல்லை. நாங்கள் அரசாங்கம் என்ற ரீதியில் அடுத்த 3 வருடங்களுக்கு மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றுவோம். எங்களுக்கு பதவிக் காலத்தை நீடிக்க எந்த அவசியமும் இல்லை - என்றார். (ம)



# பரீட்சை எழுதிய சிறுமி நீரில் மூழ்கி உயிரிழப்பு

## மற்றொருவர் மருத்துவமனையில்

திருமலை, ஜன.24

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதி விட்டு, வகுப்பாசிரியருடன், பாலத்துக்கு அருகில் உள்ள கடலில் நீராடிய சிறுமியொருவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மற்றுமொரு சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் திருகோணமலை இறக்கக்கண்டிப் பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுமி ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஸானி ஹன்சலா (வயது-10) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குச்சவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-4,இ)



# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மந்திகையில் திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட மந்திகையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டது. இதன்போது உணவு கையாளும் நிலையங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சமைத்த, சமைக்காத உணவுகளை ஒன்றாகப் பேணியமை, பிளாஸ்ரிக் தட்டில் இடியப்பம் தயாரிப்பு, ஊழியர் தங்குமறையை உணவுப் பொருள் களஞ்சியமாகப் பேணியமை, காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, பூஞ்சணம் வளர்ந்த பனங்கட்டிகளை விற்பனைக்காக வைத்திருந்தமை போன்றன சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டன. சுகாதாரத்துக்குத் தீங்கான பொருள்கள் உடனடியாக அழிக்கப்பட்டதுடன், உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. (ஓ-4,26)

# 1.5 பில். டொலர் மேலதிகமாக இந்தியாவிடமிருந்து பெறப்படும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 24

அரசாங்கம் அண்மையில் பெற்ற கடன்கள் மற்றும் உதவிப் பொதிகளுக்கு மேலதிகமாக மேலும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை இந்தியாவிடமிருந்து பெறக் கூடும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நேற்று கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடியதன் பின்னர் இலங்கைக்கு பெரியதொரு உதவிப்பொதி கிடைத்துள்ளது. இதற்கு மாற்றாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவையும் அரசாங்கம் பெற முடியும். தேவைப்படும் நேரத்தில், நேசநாடுகள் இலங்கைக்கு உதவி செய்வதால் நாடு தனிமைப்படுத்தப்படவில்லை அல்லது திவால் நிலையின் விளிம்பில் இல்லை. அரசாங்கம் பொதுவாக்கெடுப்பு நடத்துவதில் கவனம் செலுத்தவில்லை. மாறாக அடுத்த மூன்று வருடங்களில் தனது வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது - என்றார். (ம)

# விண்ணப்பம் கோரல்

வவுனியா, ஜன. 24

2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான இலவச முழுநேர உயர்கல்வியைத் தொடர்வதற்கு, வவுனியா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 4 ஆண்டுகள் , உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா 2 ஆண்டுகள் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்களை, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு, உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், ஓமந்தை, வவுனியா என்ற முகவரியில் அல்லது 077 6162010, 024 2052733 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (ஓ-ரி1,110)

# பெரமுனவின் ஆட்சியை கைப்பற்றியது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 24

பொதுஜன பெரமுன வசமிருந்த லாஹுகல பிரதேசசபையின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியுள்ளது.

புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் பிளவு காரணமாக இவ்வாறு குறித்த பிரதேசசபையின் ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியுள்ளது. பொதுஜன பெரமுனவின் முன்னாள் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் வடக்கில் 30 பேர் பயிற்சி நிறைவு

யாழ்ப்பாணம், ஜன.24

வடக்கு மாகாணத்தில் பயிற்சிகளை முடித்த 30 பேர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாக வெளியேறியுள்ளனர். யாழ்ப்பாணம் பண்ணை பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஒன்றரை வருடங்களாகப் பயிற்சிகளைப் பெற்ற பயிலுநர்கள் 30 பேரே இவ்வாறு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களாக வெளியேறியுள்ளனர்.

பயிற்சியை முடித்த பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், போதனாசிரியர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்டவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஓ-4,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்காளிகளை பாதுகாப்பதற்கு பதிலாக
# 2 கோடியே 20 இலட்சம் மக்களை பாதுகாப்பதே எமது அரசியல்
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



**கொழும்பு, ஜன. 24**
**ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலானது குடும்பம், பங்காளிகளை பாதுகாக்கும் அரசியலன்றி நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாக்கும் அரசியலாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில், இளைஞர்களை கல்வி, அரசியல், பொருளாதார, சுகாதார, கலாசார மற்றும் மார்க்க ரீதியாக ஊக்குவிப்பதே ஐக்கிய இளைஞர் சக்தியினுடைய கொள்கையின் நோக்கமாகும். என்னுடைய ஆட்சியின் கீழ் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனை சபை இளைஞர்களை மையமாகக் கொண்டு அமைக்கப்படும்.

எவராயினும் நாட்டு மக்களின் பணத்தையோ அல்லது அரச உடைமைகளையோ மோசடி செய்திருப்பின் அவர்களை நிபந்தனைகள் எதுவுமின்றி சட்டத்தின்முன் நிறுத்தி, தண்டனை வழங்குவது ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான கொள்கையாகும். தமது வயிற்றையும் சட்டைப் பைகளையும் நிரப்புவதற்காக அப்பாவி மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் யுகத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். அரசின் பங்காளிகளை அல்லாமல் நாட்டிலுள்ள 2 கோடியே 20 லட்சம் மக்களையும் பாதுகாப்பதுதான் எமது அரசியல் - என்றார். (ம)

# சுவாமி விவேகானந்தரின் 125ஆவது நிறைவு விழா

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆவது நிறைவு விழாவை முன்னிட்டு, இராமகிருஷ்ண மிஷனால், யாழ்ப்பாணத்தில் 4 நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற் சிக் கலாசாலையிலும், மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கதிரேசன் கோவிலிலும் நிகழ்வுகள் இடம் பெறும்.

நிகழ்வுகளில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதுவர், தமிழ் நாட்டிலிருந்து வருகை தரும் சுவாமி ஹரிவ்ரதானந்த மகாராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.(ஒ,-4,இ)

# 13ஆவது திருத்தத்தை தீர்வாக ஏற்கவில்லை
## கட்சியொன்று மக்களைக் குழப்புகின்றது
## ரெலோவின் பேச்சாளர் சுரேன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24
தமிழ்மக்களின் அரசியல் தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுவிட்டோம் என தமிழ்க் கட்சியொன்று மக்களைத் தவறாக வழிநடத்த முற்படுகின்றது என்று ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரே நிலைப்பாட்டிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தத்தை ஏற்று, ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை அடகு வைத்து விட்டதாக தமிழ்க் கட்சியொன்று மக்களைக்குழப்ப முற்படுகிறது. தமிழர்களுடைய இனப்பிரச்சனை அர சியல் தீர்வு விடயங்களில் ஒரே நிலைப் பாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தெளி வான கொள்கையுடன் இருக்கிறார்கள். இந்தியாவுக்கு அனுப்பிய அறிக்கையில் 13ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்கவில்லை. இதை மக்களுக்குத் தெளிவாகக் கூறுகிறேன்.

சமஷ்டி அடிப்படையிலான வடக்கு - கிழக்கு இணைந்த அதிகாரமே தமிழ் மக்களுடைய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறோம். இப்போதும் அதையே கூறுகிறோம்.

அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் 13க்கு அப்பால் தமிழர்களுக்கு தீர்வு வழங்குவேன் என உறுதி அளித்திருந்தார்.

இந்தியாவுக்கு 13 தொடர்பில் நாம் அழுத்தங்களை வழங்காது இருப்பது இலங்கை அரசுக்குச் சாதகமாகி விடும். இதை சரியாக விளங்கிக்கொண்ட தமிழ்க் கட்சி ஒன்று தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக 13ஐ ஏற்றுவிட்டோம் என கூறி எதிராக மக்களைத் தவறாக வழிநடத்துகின்றது - என்றார். (ம-20)

**கடை வாடகைக்கு**
மருதனார்மடத்தில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 9978 332
074 1864 738
(CS 1294) 1-6

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் கணித ஆசிரியர்
**திரு.ச.பாலமுரளி** அவர்களின்
அன்புத் தந்தையார்
**திரு.ஆறுமுகம் சபாநாயகம்**
**(ஓய்வுபெற்ற அதிபர்)**
அவர்கள் நேற்று (23.01.2022)
இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**நலன்புரிக் கழகம்**
**யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்**
(CS 1293)1-6

**கண்ணீர் அஞ்சலி**



**பிறப்பு** **14.08.1940**
**இறப்பு** **20.01.2022**
**அமரர்**
**ஞானேஸ்வரி நடராசா (கிளி)**
**(திருமகள் வீதி, அரியாலை)**
20.01.2022 அன்று சிவபதமடைந்த அமரர் ஞானேஸ்வரி நடராசா (கிளி) அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கார்த்திகேசு குணரத்தினம் குடும்பம்**
**Sydney, Australia.**
**சிட்னி, அவுஸ்திரேலியா**
(CS 1293)1-6



# எம்.பி.களுக்கு கொரோனா

கொழும்பு, ஜன.24
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கொட்டேகொட மற்றும் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, ஜன. 24
தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியோர் கொடுப்பனவு பெறுவோருக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு, பிரதேச சமூக சேவைகள் அலகினால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-ரி1,9)

# இளைஞரை நிர்வாணமாக்கி தாக்கிய தம்பதி கைது

கொழும்பு, ஜன.24
இளைஞர் ஒருவரை நிர்வாணமாக்கித் தாக்கிய குற்றச்சாட்டில் கணவனும், மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்திய தம்பதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்த இளைஞர், தனது மனைவிக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டதன் காரணமாகவே அவரை நிர்வாணமாக்கித் தாக்கியதாக பொலிஸ் விசாரணையில் தாக்குதல் நடத்தியவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"எல்லோரையும் திருப்திப்பட வைக்க நினைப்பவனால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது..!" - லெனின்

## எங்களூரில் ஏனிந்த மாசடைவு...?


இலங்கையில் வளிமாசடைதல் அதிகரித்துள்ள நான்கு மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் இடம்பிடித்துள்ளது. வளிமாசடைவு அதிகரிப்பு நிகழும் ஏனைய மாவட்டங்களாக கொழும்பு, புத்தளம்,கண்டி ஆகியன அடையாளப்படுத்தப்பட்டதில் ஒரு தர்க்க நியாயம் உண்டு. ஏனெனில் அந்த மாவட்டங்களில் இயங்கும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகையே இத்தகைய வளிமாசடைவை உண்டுபண்ணுதலில் மிகமுக்கிய காரணியாக இருக்கின்றது. ஆனால், யாழ்ப்பாணத்தில் அப்படியான பிரமாண்டமான தொழிற்சாலைகள் எவையும் இல்லை. முன்னொரு காலத்தில் இருந்த காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைகூட இப்போது செத்துப்போய், வெறும் எலும்புக்கூடாக மாறிவிட்டது. அப்படியானால் யாழ்ப்பாணத்தில் இப்படி வளிமாசடைவு அதிகரிப்புக்கு காரணம் என்னவாக இருக்கும்? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய உற்பத்தித் தொழிற்சாலைகள்தான் இல்லையே தவிர, சிறு சிறு உற்பத்தி நிலையங்கள் இயங்கவே செய்கின்றன. அத்தகைய உற்பத்தி நிலையங்கள் உரிய தரக்கட்டுப்பாட்டை பேணுவதென்பது முயற்கொம்பே. பெரும்பாலான சிறுகைத்தொழில் நிறுவனங்கள் அனுமதி பெறாமலே இயங்குகின்றன என்பதும் கூடுதல் தகவல். ஏனெனில் அவ்வாறான அனுமதி வழங்கலில் உள்ள அரச நிர்வாக இழுபறிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் கெடுபிடிகள், பணச்செலவு என்பவற்றாலேயே அனுமதிக்கு விண்ணப்பிக்க அத்தகைய கைத்தொழிலாளர்கள் பின்னடிக்கின்றனர் எனவும் சொல்லப்படுகின்றது. மூலைக்கு மூலை முளைத்துவரும் இத்தகைய சிறு தொழில் முயற்சி நிலையங்கள், மின்சார சபையின் மின்சாரத்துக்கு மேலதிகமாக ஜெனரேட்டர்களை அதிகம் பயன்படுத்துகின்றன. அப்படியான ஜெனரேட்டர்கள் மூலம் வெளியேறும் புகை வளிமண்டலத்தை மிகமோசமாகப் பாதிப்படைய வைக்கின்றது.

சிறு கைத்தொழில் நிலையங்களை விடவும், யாழ்ப்பாணத்தின் வளிமண்டலத்தை அதிகமதிகம் ஆட்டுவிப்பது, வாகனங்களில் இருந்து வெளியேறும் புகைதான். முன்னரெல்லாம் வீட்டுக்கு ஒரு சைக்கிள் இருப்பதைப்போன்று இப்போது வீட்டுக்கு வீடு கார், டிப்பர், ஹை-ஏஸ், ஜே.சி.பி என்பன நிலைபெறத் தொடங்கிவிட்டன. இவற்றை விட ஒரு வீட்டில் குறைந்தபட்சம் அங்கு வசிப்பவர்கள் அனைவரும் ஆளுக்கொரு மோட்டார் சைக்கிளும் வைத்திருக்கின்றனர். இது போதாதென்று, மணல் அள்ளுதல், வீதிப் புனரமைப்பு, கொழும்பில் இருந்து பொருள்களைக் கொண்டுவருதல், பயணிகள் போக்குவரத்து என்பனவும் யாழ்ப்பாணத்தில் அதிகம். இவற்றின் போது பயன்பாட்டில் இருக்கும் வாகனங்கள் கணக்கற்று வெளித்தள்ளும் புகையும் வளிமண்டத்தின் மூக்கையே பொத்த வைக்குமளவுக்கு ஆட்டம் காட்டுகின்றது.

முன்னரைப் போல பரந்துவிரிந்த விசாலமான காணிகளில் யாழ்ப்பாணத்தவர்கள்வீடுகளை அமைப்பதில்லை. வீடுகள் பெருத்து,காணிகள் குறுகி விட்டன. அதனால் திண்மக் கழிவுகளை முன்னர் போல வீட்டு வளவுக்குள் வெட்டிப் புதைக்க முடிவதில்லை. உள்ளூராட்சி சபைகளிலும் சீரான திண்மக்கழிவகற்றும் முகாமைத்துவம் பேணப்படுவதில்லை. எனவே, வீட்டைச்சுத்தமாக வைத்திருப்பதற்காக, கழிவுகளை எல்லாம் காணியின் ஒரு மூலையில் போட்டு எரிப்பதே நம்மவர்களின் இப்போதையை நடைமுறை. இப்படி எரியூட்டப்படும் கழிவுகளில் அதிகம் இருப்பவை பொலித்தீன் பைகளும், பிளாஸ்ரிக் பொருள்களுமே. இவற்றில் இருந்து சரசரவென விண்ணுயரும் வெண்புகை, பார்ப்பதற்குச் சாதுவாக இருந்தாலும், வளிமண்டலத்தில் மாசடைவை சடுதியாக உயர்த்தி விடுகின்றது.

மாற்று வலு மின்சாரப் பொறிமுறை, சீரான திண்மக்கழிவகற்றும் முகாமைத்துவம், வாகனப் பயன்பாட்டில் கட்டுப்பாட்டைப் பேணல், உரிய தரநிர்ணயங்களோடு சிறு கைத்தொழில் மையங்களை இயங்கச் செய்தல் என்பனவே இனியும் நமது சூழலில் இருக்கும் வளியின் மாசடைவு வீதத்தைக் கட்டுப்படுத்த உதவும் செயற்பாடுகள். அத்தகைய தற்காப்புநடவடிக்கைகளைமுன்னெடுக்காவிட்டால், எதிர்காலத்தில் நல்ல காற்றையும் காசு கொடுத்து வாங்குபவர்களாக யாழ்ப்பாணத்தவர்கள் மாறக்கூடும்.




# தேவையான அளவு அரிசி கையிருப்பில்

### தரகுப் பணத்துக்காகவே இறக்குமதி
### விவசாயிகளின் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன. 24**

**சில தரப்பினருக்குத் தரகுப் பணம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது. மற்றும்படி தேவையான அளவு அரிசி கையிருப்பில் உள்ளது என்று தெரிவித்தார் அகில இலங்கை விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் நாமல் கருணாரத்ன.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு வருடாந்தம் 3.7மில்லியன்மெற்றிக்தொன் அரிசி தேவைப்படுகின்றது. 3.6 மெற்றிக் தொன் நுகர்வுக்காகவும், ஒரு லட்சம் தொன் சாகுபடிக்காகவும் தேவைப்படுகின்றது. அரசாங்க அமைப்புகளில் உள்ள தரவுகளின் அடிப்படையில், இலங்கை 2019ஆம் ஆண்டில் 4.78 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியையும், 2020ஆம் ஆண்டில் 5.03 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியையும், 2021ஆம் ஆண்டில் மேலும் 4 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியையும் உற்பத்தி செய்துள்ளது. எனவே, பெரும்போகத்தில் போதிய அறுவடை கிடைக்காவிட்டாலும், 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை தேவையான அரிசி கையிருப்பு நாட்டில் உள்ளது - என்றார். (ம)

## நெல் அறுவடை வீழ்ச்சி-
# முல்லைத்தீவில் விவசாயிகள் ஏமாற்றம்

முல்லைத்தீவு,ஜன.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் நெல் விளைச்சல் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

நெற்செய்கைக்குரிய இரசாயன உரம் மற்றும் களைநாசினி, கிருமி நாசினி கிடைக்காமையால் இந்தமுறை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால், அறுவடை இயந்திரக்கூலியும் அதிகரித்துள்ளது. விளைச்சலும் கிடைக்காத நிலையில், விவசாயிகள் அறுவடையிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் நெல்லை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாது திண்டாடுகின்றனர்.


உலர்ந்த சிவப்புப் பச்சை நெல் ஒரு மூடை 6 ஆயிரம் ரூபாவுக்கும், உலராத நெல் 4 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் விவசாயிகள் நெல்லை உலரவைத்து விற்பனை செய்ய வேண்டியுள்ளது. எனினும் நெல் உலரவிடும் தளங்கள் பல விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. இதனால் பிரதான வீதிகளில் நெல்லை உலரவிடவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (ஒ-4,246)



நாளை 25.01.2022 செவ்வாய்க்கிழமை தை 12
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 3.36 - 05.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 நாள்களில் மட்டும் 5,391 தொற்றாளர்கள்



கொழும்பு.ஜன.24

**நாட்டில் கடந்த 7 நாள்களில் மட்டும் 5 ஆயிரத்து 391 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

நேற்றுமுன்தினம் முடிவடைந்த 7 நாள்களில் இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 87 இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

அதற்கமைவாக நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் 6 லட்சத்து ஆயிரத்து 48 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 5 லட்சத்து 75 ஆயிரத்து 932 பேர் குணமடைந்துள்ளனர். 15 ஆயிரத்து 284 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)



## துறைமுக நகரில் கட்டணச் சலுகை

கொழும்பு,ஜன.24

கொழும்பு துறைமுக நகரில் செல்பி மற்றும் தனிப்பட்ட காணொலிகள் எடுப்பதற்கு கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று கொழும்பு துறைமுக நகரத் திட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

துறைமுக நகரத்தில் தனிப்பட்ட நிகழ்வுகள், வணிகப் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களுக்கு கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)

## பூஸ்டர் டோஸால் பக்க விளைவில்லை

கொழும்பு,ஜன.24



கொரோனாத் தொற்றைத் தடுக்க செலுத்தப்படும் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதால், இதுவரை எந்தவித பக்க விளைவுகளும் பதிவாகவில்லை என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் டோஸ் தொடர்பில் சமூகத்தில் பல்வேறு தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

எனினும் முதலாது மற்றும் இரண்டாவது டோஸ் ஏற்றிய போது, ஏற்படாத பக்க விளைவுகள் எதுவும், மூன்றாவது டோஸ் போடும்போது ஏற்பட்டதாக இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றது. மூன்றாவது டோஸை மக்கள் செலுத்த வேண்டியது அவசியம். கொரோனா அலையைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழி பூஸ்டர் டோஸ் மட்டுமே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)



## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

கொழும்பு,ஜன.24

குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை, சூரியவெவப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முவன்பெலஸ்ஸ, சூரியவெவப் பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடன் விவகாரமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

படுகொலையுடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஒ-4,22)



## காதல் விவகாரம் இளைஞன் கொலை

கொழும்பு,ஜன.24

காதல் விவகாரத்தால், இளைஞன் ஒருவர் கண்ணாடித் துண்டால் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கம்பஹா, கடவத்தைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடவத்தை, கோணஹேனப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நுவர வீதி, கடவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். காதல் விவகாரமே, இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஒ-4,22)

## வெடிபொருள்களுடன் இளைஞன் கைது

கொழும்பு,ஜன.24

வெடிபொருள்களைத் தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைப் பாணந்துறை பொலிஸ் பிரிவின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

போதுருவதண்டப் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அவரிடமிருந்து 22 டெட்டனேட்டர்கள், 150 வோட்டர்ஜெல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ-4,22)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பல்வேறு முறைப்பாடுகள் பதிவு

### விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு,ஜன.24



நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில், பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை குறித்து விசாரணைகள் நடத்தப்படும். அதே வேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் புத்தாண்டுக்கு முன்னதாக பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளோம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டி.தர்மசேன தெரிவித்துள்ளார். இப் பரீட்சை நடத்திய நிலையங்களில் நீண்ட நேரத்துக்குப் பின்னர் வினாத்தாள் கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் விடை எழுதுவதற்கான மேலதிக நேரம் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

சில பரீட்சை நிலையங்களில் சுவர்க்கடிகாரம் காட்சிப்படுத்தப்படவில்லை. விடை எழுதுவதற்கு தாள்கள் வழங்கப்படவில்லை. மேற்பார்வையாளர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளனர் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பரீட்சைக்கு இம்முறை சிங்கள மொழி மூலம் 2 லட்சத்து 55 ஆயிரத்து 62 மாணவர்களும், தமிழ்மொழிமூலம் 85 ஆயிரத்து 446 மாணவர்களும் தோற்றியுள்ளனர். 2 ஆயிரத்து 943 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4,இ)

## இரசாயன உரங்கள் விரைவில் இறக்குமதி

கொழும்பு,ஜன.24

யூரியா உள்ளிட்ட இரசாயன உரங்கள் அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என்று தேசிய உரச் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் கசுன் மஹதன்தில தெரிவித்துள்ளார்.

இரசாயன உரங்கள் இறக்குமதித் தடை நீக்கப்பட்டதன் பின்னர், கடந்த சில திணங்களில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட்டது. எஞ்சிய இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தற்போது அனுமதி கிடைத்துள்ளது.

குறித்த இரசாயன உரங்கள், கப்பல் மூலம் சில வாரங்களில் நாட்டுக்குக் கொண்டு வரப்படும். எனினும் டொலர் மற்றும் கடன் சான்றுப் பத்திரங்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக, இரசாயன உரங்களை நாட்டுக்கு இறக்குமதி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பரவலாக மாறிய ஒமிக்ரோன்

## இந்திய மத்திய அரசு அறிவிப்பு

**புதுடில்லி, ஜன.24**


**இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்று சமூகப் பரவல் ஆகிவிட்டது என மத்திய அரசு அறிவித்துள்ளது.**



தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வகை கொரோனா உலக நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்றது. இந்த ஒமிக்ரோன் தொற்று பரவும் வேகம் உலக நாடுகளையே தற்போது கதிகலங்க வைத்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் ஒமிக்ரோன் சமூகப் பரவல் நிலையை எட்டிவிட்டது என மத்திய அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில், இந்தியாவில் சமூக பரவல் காரணமாக ஒமிக்ரோன் தொற்று வேகமாக பரவுமே தவிர வெளிநாட்டுப் பயணிகளால் பரவாது எனவும் மக்கள் உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது மற்றும் தடுப்பூசிகளை முறையாக எடுத்துக் கொள்வது ஆகியவை மட்டுமே உருமாறிய ஒமிக்ரோன் தொற்றுக்கு நன்மை பயக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## காந்தியின் 'விருப்பப் பாடல்' குடியரசு நிகழ்ச்சியில் நீக்கம்

புதுடில்லி, ஜன.24

இந்தியக் குடியரசு தின நிகழ்வில் மகாத்மா காந்தியின் விருப்பத்துக்குரிய பாடல் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக 'சாரே ஜஹான் சே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா' பாடல் இசைக்கப்படவுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மகாத்மா காந்திக்கு விருப்பமான 'Abide with me' என்ற பாடல் 1950ஆம் ஆண்டில் இருந்து இசைக்கப்பட்டு வருகிறது.

ஆனால், இந்த முறை நடைபெறவுள்ள குடியரசு தின விழா இறுதி நிகழ்வில் இப்பாடல் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு பலரும் எதிர்ப்பும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வாடகைத் தாய் மூலம் குழந்தைபெற்ற பிரியங்கா



சென்னை, ஜன23

வாடகைத் தாய்மூலம் குழந்தை பெற்றுக் கொண்டுள்ளோம் என பிரியங்கா - நிக் ஜோன்ஸ் தம்பதியினர் சமூக வலைத்தளத்தில் அறிவித்துள்ளனர்.

வாடகைத் தாய் மூலம் குழந்தையை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த சிறப்பான தருணத்தில் குடும்பத்துடன் நேரம் செலவழிக்க விரும்புகிறேன் என பிரியங்கா வும் குறிப்பிட்டுள்ளார். பிரியங்காவைவிட நிக் 10 வயது இளையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## திருச்சியில் நெடுஞ்சாலையில் இறந்து கிடந்த 24 குரங்குகள்

### வனத்துறையினர் விசாரணை

திருச்சி, ஜன.24

திருச்சி நெடுஞ்சாலை அருகே 24 குரங்குகள் இறந்து காணப்பட்டமை தொடர்பில் வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை சிறுகனூர் அருகே நெடுங்கூர் பகுதியில் குரங்குகள் சில மயங்கிக் கிடக்கின்றன என வனத்துறையினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலையடுத்து, அங்கு விரைந்த வனத்துறையினர், அனைத்து குரங்குகளும் இறந்து கிடப்பதை உறுதி செய்துள்ளனர்.

இவற்றில் 6 பெண் குரங்குகள், 18 ஆண் குரங்குகளுமாக மொத்தம் 24 குரங்குகள் அடங்குகின்றன. வனத்துறையினர் அவற்றை மீட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ச)



இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125 ஆவது பிறந்த தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மலர்தூவி மரியாதை செலுத்தினார். (ச)

## ஒமிக்ரோனின் புதிய மாறுபாடு அடையாளம்

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இங்கிலாந்தில் கண்டறியப்பட்டுள்ளது எனவும் இது ஒமிக்ரோன் வைரஸில் இருந்து உருவாகியுள்ளது எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஒமிக்ரோன் வைரஸின் துணைத் திரிபான வைரஸ் கண்டறியப்பட்டது.

அது பரவத் தொடங்கியுள்ள நிலையிலேயே ஒமிக்ரோனின் புதிய துணை மாறுபாடான இன்னொரு வைரஸ் இங்கிலாந்தில் கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒமிக்ரோனின் புதிய மாறுபாடு பிரான்ஸ் மற்றும் இந்தியாவிலும் விரைவில் பரவக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். உலக சுகாதார ஸ்தாபனத்தின் தகவலின்படி ஒமிக்ரோன் மாறுபாடு மூன்று துணை திரிபுகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். பணியாளருக்கு அனுகூலம் உண்டாகும். வேண்டுதல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். மனபலம் கூடும். நண்பர்களின் சந்திப்பில் எதிர்காலப் பயன் இருக்கும்.

**இடபம்:** குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவழிப்பீர்கள். மகிழ்ச்சி கூடும். பணியாளருக்கு சிறு சலுகை ஒன்று கிடைக்கும். லாபம் கூடும். சிறு தொல்லை வரலாம்.

**மிதுனம் :** உழைப்பை அதிகம் நம்புவீர்கள். மன நிறைவு ஏற்படும். வாகனத்தில் செல்லும் போது கவனமாக இருக்கவும். குழந்தைகளால் எதிர்பாராத சந்தோஷம் வரும்

**கடகம்:** உங்களால் தந்தைக்கு நன்மை ஏற்படும். பயம் நீங்கும். பெரியவர்களுக்கு ஆலோசனை தருவீர்கள். மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பெரியோரின் ஆசி கிடைக்கும். நண்பர் சந்திப்பு உண்டு.

**சிம்மம்:** குதூகலமான நாள். பழைய பயம் ஒன்று முடிவுக்கு வரும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. கவலை தீரும். நல்லவர் ஒருவரின் உதவியுடன் செயலில் வெற்றி உண்டாகும்..

**கன்னி:** குடும்பம் விரிவடையும். நண்பருக்கு நன்மை செய்வீர்கள். உங்களது முயற்சியும் உழைப்பும் நல்ல முறையில் பலனளிக்கும். இன்று மகிழ்ச்சிக்குரிய நாளாக இருக்கும். மனநிம்மதி அதிகரிக்கும்.

**துலாம்:** மனவலிமை கூடும். வெளியூர்ப் பயணங்களால் நன்மை உண்டு. வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் இன்று நீங்கும். குடும்பத்தினர் இடையே புரிதலும் நெருக்கமும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தந்தை வழியில் ஏற்பட்ட செலவுகள் முடிவுக்கு வரும். அலுலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவு ஒன்றை துணிந்து எடுத்து பலன் பெறுவீர்கள். . தெய்வ வழிபாடு நலம் தரும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் நல்லபடியாக முடிந்து நிம்மதி அளிக்கும். சகோதர, சகோதரிகளுடன் இருந்த சிறு பிணக்குகள் நீங்கும். உறவினர்கள், நண்பர்களின் செயல்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** முன்பைவிட எதிலும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் வெற்றி உண்டு. மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும்.

**கும்பம்:** நேற்றிருந்த சிரமங்கள் இன்று மறைந்து மகிழ்ச்சி வரும். நீங்களே சில சங்கடங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம். தேவையற்ற பகைமை வேண்டாம். வீண் பேச்சைத் தவிருங்கள்.

**மீனம்:** யாரையும் உதாசீனம் செய்து சிரமத்துக்குள்ளாக வேண்டாம். எடுத்த முயற்சி பலிதமாகும். சிறு சங்கடம் ஏற்பட்டு நீங்கும். அனுபவசாலிகள் தரும் ஆலோசனை உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபகரணங்கள் கையளிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் நிதி ஒதுக்கீட்டில், கைதடிப் பிரதேச பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களும் இரு அமைப்புகளுக்கு தளபாடங்களும் கடந்த 20 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டன.

கைதடி சேதுகாவலர் வித்தியால யம், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம், கைதடி எருதிடல் அ.த.க.பாட சாலை, கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி நவீல்ட் பாடசாலை ஆகியவற்றுக்கு விளையாட்டு உபகரணங்களும் ்கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லம், நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு தளபாடங்களும் கையளிக்கப்பட்டன. (ஒ-ரி1,9)

## மரண அறிவித்தல்



ஜனனம் 30.05.1962 மறைவு 23.01.2022

### சாந்தி திருப்பதி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தி திருப்பதி நேற்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தலிங்கம் தையல் நாயகி தம்பதியரின் அன்பு மகளும், திருப்பதியின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சாந்தகுமார், சதீஸ்குமார் மற்றும் உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி (கனடா), வசந்தரூபி (கனடா), பார்வதி, திருமகள், ஞானபண்டிதர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஜித், அனுஷா, சஞ்சீவ், ஜனுஜா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எம்.பி.சி.எஸ். லேன்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 977 1191
+1416 823 6291

(CS 12961) 1-6

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 07 . 05 . 1922



உதிர்வு 27 . 12 . 2021

### அமரர் திரு.கந்தையா தில்லையம்பலம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.01.2022) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 26.01.2022 புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்திய எம் அன்பு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை பணிப்பாளருக்கும், வைத்தியர்கள், தாதியர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதி யாத்திரையிலும் கூடவே இருந்த அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிக் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம்.

கதிர்காம கோவிலடி, வதிரி,
கரவெட்டி.
021 226 4546 / 077 949 8674

குடும்பத்தினர்.

(GR 37422) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1967



மறைவு 23 . 01 . 2022

### இராசையா கிரிதரன் (கிரி)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.43, உழவர் வீதி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கிரிதரன் அவர்கள் நேற்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தாவடி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி மங்கையற்கரசி தம்பதியரின் அன்புப் பேரனும் (தங்கத் தம்பி) சிவரூபி அவர்களின் அன்புக் கணவரும், யாழினி, சாரங்கன், லக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யசோதா, அனுசியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரகோபால், சண்முகராசா, சரஸ்வதி கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜ்குமார், வசீகரன், ஐங்கரன், இந்துஜன், துர்க்கா சசிகரன், வசந்தராஜ், லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.43, உழவர் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 238 4514

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சபாநாயகம்

(ஓய்வுநிலை அதிபர், யா/ நீர்வேலி தெற்கு, இ.த.க. பாடசாலை)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சபாநாயகம் நேற்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - தேவாம்பிகை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கோடீஸ்வரியின் பாசமிகு கணவரும், பாலமுரளி (ஆசிரியர் யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), பவானி (ஆசிரியர் - வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), றஜனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கொழும்பு), தயானி (ஆசிரியர் - யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), மோகன முரளி (தொழில்நுட்ப உத்தியோகத்தர் சாருகாயா கட்டட நிர்மாணம்) ஆகியோரின் தந்தையாரும், குருபரன், பிரசன்னா, சசிகரன், லக்ஷாயினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், செல்வராணி மற்றும் குலேந்திரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரன், செந்தில்குமரன், குமாரசிவம், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும், ஜனனி, தரங்கினி, ஜானவி, ராகவி, வக்ஷப்பிரியன், சைலஜா, நக்ஷிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமுருகன் திருமண மண்டபம்
(அருகாமை),
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 538 6405
077 844 8581

(cs41291) 12-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நேர்கண்டவர்: சனத்

# போரால் உறவுகளை இழந்தோருக்கு சமூகப் பாதுகாப்பு அவசியமே!

*நீதி அமைச்சின்கீழ் செயற்படும் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் **டீப்தி லாமா ஹேவா,** உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் பிரசுரமாகின்றது.*



டீப்தி லாமா ஹேவா,

**கே:** *தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் பணிகள் தற்போது எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன? இந்தப் பணியகத்தின் இலக்கை அடைவதற்கான வேலைத்திட்டங்கள் என்ன?*

**ப:** போர் - மோதல் முடிவடைந்த பின்னர் இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் கட்யெழுப்புவதற்கான தேவைப்பாடு எழும். அந்தவகையில் மக்களின் மனங்களில் ஏற்பட்ட வடுக்களை ஆற்றுப்படுத்துவதற்காக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் பரிந்துரைகளைப் பெறுவதற்காக 'எல்.எல்.ஆர்.சி' எனப்படுகின்ற நல்லிணக்க ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவானது, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலகம் அல்லது பிரிவொன்று அரசிடம் இருக்க வேண்டும் என்ற பரிந்துரையையும் முன்வைத்திருந்தது. அதற்கமையவே 2015 இல் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் நிறுவப்பட்டது.



நீதி அமைச்சர் அலி சப்ரி

எந்த நோக்கத்துக்காக இந்த செயலகம் நிறுவப்பட்டதோ அந்த இலக்கை அடைவதற்காக பல வேலைத்திட்டங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். எதிர்காலத்தில் அதை விடவும் கூடுதலான விடயங்களை நாம் செய்யவேண்டியுள்ளது. எம்மால் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. எதிர்காலத் திட்டங்கள் சம்பந்தமாக தினமும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. புதிதாக நாம் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களும் இணைக்கப்பட்டுவருகின்றன. சகல இன மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமென்பதில் நீதியமைச்சர் அலி சப்ரி அதீத அக்கறையோடு எமது செயலகத்தின் ஊடாக பல வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். அவை நடைமுறைக்கு வரும்போது பல பிரச்சினைகள் தீருமென நம்பலாம்.

## 20 மும்மொழிப் பாடசாலைகள்

எமது பணிகளுக்கென வரையறையொன்று இல்லை. எனினும், எமது பணிகளை நேர்த்தியாக முன்னெடுப்பதற்காக 8 பிரதான விடயதானங்களின்கீழ் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதில் ஒன்றுதான் கல்வித்துறை. இதற்கமைய மத்திய மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுகளுடன் இணைந்து இவ்வருடத்துக்குள் 20 மும்மொழிப் பாடசாலைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டில் தற்போது 67 மும்மொழி பாடசாலைகள் உள்ளன. குறித்த பாடசாலைகள், எமது இலக்கை நோக்கி நகரக்கூடிய வகையில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன்பின்னர் புதிய மும்மொழிப் பாடசாலைகள் நிறுவப்படும். மாணவர்களுக்கு மும்மொழிகளைக் கற்பிப்பது மாத்திரம் மும்மொழிப் பாடசாலைகளின் நோக்கமாக இருக்காது. மும்மொழிப் பாடசாலைகளுக்கு அனைத்து இன மற்றும் மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் வருவார்கள்.

இவ்வாறு மாறுபட்ட சூழல்களில் இருந்து வருபவர்களுக்கிடையில் இயல்பாகவே நல்லுறவை ஏற்படுத்துதல், புரிந்துணர்வை வளர்த்தல், இணைந்து செயற்படுதல், ஏனையவர்களின் இனம், மதம் மற்றும் கலாசார அம்சங்களுக்கும் மதிப்பளித்தல், நிகழ்வுகளை இணைந்து கொண்டாடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தல் போன்றனவே எமது நோக்கமாக இருக்கின்றது.

## பல்கலைக்கழகங்களில் 'ஒற்றுமை' நிலையங்கள்

அதேபோல நாட்டில் 17 தேசிய பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் தேசிய ஒற்றுமை தொடர்பில் 17 நிலையங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்துக்குள் மோதல் ஏற்பட்டால் அதனைத் தீர்ப்பது அல்ல இதன் நோக்கம்.

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு தொடர்பான விடயத்தை பல்கலைக்கழக பாடத் திட்டத்துக்குள் உள்வாங்குதல், தேசிய ஒற்றுமை தொடர்பில் கற்பிக்கக்கூடிய பேராசிரியர்களை உருவாக்கிக் கொள்ளுதல், இதன் நியாயத்தன்மையை சமூகமயப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை இதன்மூலம் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறான நடைமுறை எமது சமூகத்துக்கு அவசியம். இதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இது சம்பந்தமாக நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. எமது தரப்பில் இருந்தும் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும். கலை,கலாசார விடயங்கள் சம்பந்தமாகவும் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். மதங்களுக்குரிய தேசிய நிகழ்வுகளை பிரதேச மட்டத்தில் ஏற்பாடு செய்தவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கினோம்.தனது இனம்தான், மதம்தான் சிறந்தது எனக் கூறுவதைவிடவும், அனைவருக்கும் அதற்கான உரிமை உள்ளது என்ற நிலையை உருவாக்கதே எமது நோக்கம். கலை,கலாசார மற்றும் மதம்சார் நிகழ்வுகளைக் கடைப்பிடிக்கும் உரிமை அனைவருக்கும் இருக்கின்றது என்ற புரிதலை ஏற்படுத்தல்.

## நல்லிணக்கத்தில் ஊடகங்களின் வகிபாகம்

போரால் உறவுகளை இழந்தவர்கள் வடக்கிலும், தெற்கிலும் இருக்கின்றனர். இவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு அவசியம். அதேபோல உளவியல் ஆலோசனைகளும் தேவைப்படுகின்றன. இதற்கான உதவிகளை நாம் வழங்குவோம். தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு ஊடகங்களின் ஒத்துழைப்பும் அவசியம். விளையாட்டு, அரசியல் மற்றும் பொருளாதாரத்துக்கு தனியான செய்தியாளர்கள் - குழுக்கள் இருக்கும். எனவே, தேசிய ஒற்றுமை சம்பந்தமாகவும் தனியான குழுவொன்று இருந்தால் நல்லது. அதற்கான பயிற்சிகளை நாம் வழங்குவோம். நல்லிணக்கம் தொடர்பில் தொடர்ச்சியாக அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களில் கருத்தாடல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக உள்ள நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக மக்களுக்கு தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெறுப்பு பேச்சு, அதேபோல அரசியல்வாதிகள் மற்றும் இதர தரப்புகளால் நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் வெளிப்படுத்தும் கருத்துகளுக்கு இடமளிக்காதிருத்தல், அதுபற்றி கேள்விகளை எழுப்பி, அதனை பிழையென சுட்டிக்காட்ட வேண்டும்.

## அரசியல்வாதிகளுடன் பேச்சு

அனைத்து அரசியல் கட்சிகளையும் சந்தித்து, நல்லிணக்கத்துக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் அக்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தப்படும். அப்போது நல்லிணக்கத்துக்கான நீண்டகால செயற்றிட்டம் தொடர்பில் இணக்கப்பாடொன்றுக்கு வரக்கூடியதாக இருக்கும். தேசிய ஒற்றுமைக்கான வேலைத்திட்டங்களை நாட்டில் நடைமுறைப்படுத்த எதிர்ப்பில்லை, அதற்கான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற பொது இணக்கப்பாட்டை அரசியல்வாதிகளிடம் பெறுவதற்கு உத்தேசித்துள்ளோம். அதேவேளை, பெண்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பிலும் கூடுதல் அவதானம் செலுத்தப்படும். குறிப்பாக போரில் பங்கேற்று தற்போது சமூகமயப்படுத்தப்பட்டுள்ளவர்கள், சமூகத்தில் பிரச்சினையின்றி வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுத்தல். அவர்களின் கல்வி, பொருளாதாரம் உட்பட இதர தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்க எதிர்பார்க்கின்றோம்.

## சர்வதேச மாநாடுகள்

அண்மையில் சர்வதேச மாநாடொன்றை நடத்தினோம். கொவிட் காரணமாக இணையவழியில்தான் மாநாடு நடைபெற்றது. பல விடயங்களைக் கலந்துரையாடக்கூடியதாக இருந்தது. அவ்வாறான மாநாடுகளை வருடாந்தம் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இவற்றை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்கு ஊடகங்களின் ஒத்துழைப்பு அவசியம்.

**கே:** *இலங்கையில் பொருளாதார மேம்பாட்டுக்காக புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடம் ஒத்துழைப்புக் கோரப்படும் நிலையில், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட் டுக்கான நடவடிக்கை சம்பந்தமாக அவர்களுடனும் பேச்சு நடத்தப்படுமா?*

**ப:** நிச்சயமாக, இதனை ஓர் அத்தியாவசிய விடயமாக நாம் கருதுகின்றோம்.

ஜெனிவா உட்பட பல இடங்களில் செயற்படும் சிங்கள புலம்பெயரிகள் எம்முடன் கலந்துரையாடியுள்ளனர். இவர்களுக்கு தமிழ் புலம்பெயரிகளுடன் சிறந்த தொடர்பு இருக்கின்றது. தமது மக்களுக்கான, உறவுகளுக்கான பல உதவித் திட்டங்களை தமிழ் புலம்பெயரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப்பிரச்சினையை புலம்பெயரிகள் எப்படி பார்க்கின்றனர், பிரச்சினையை தீர்க்க எவ்வாறான முன்மொழிவை முன்வைக்கின்றனர் என்பது எமக்கு முக்கியமாகும். அவர்களையும் நாம் இணைத்துக்கொள்வோம். தொடர்பாடல் வலையமைப்பை ஏற்படுத்தித் தருமாறு வெளிவிவகார அமைச்சரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமது பகுதிகளில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதையே புலம்பெயரிகளும் விரும்புகின்றனர்.

ACCESS TO JUSTICE
நீதிக்கான அணுகல்
යුක්තියට ප්‍රවේශයක්

**கே:** *'ஒரே நாடு ஒரே சட்டம்' உருவாக்குவதற்காக ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணி ஊடாக, பல்வேறு இனக் குழுமங்களின் தனித்துவமான கலாசாரம், சட்ட ஏற்பாடுகள் இல்லாமல் செய்யப்படும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான நிலையில் தேசிய ஒற்றுமை அல்லது ஒருமைப்பாட்டை எப்படி உருவாக்கப்போகின்றீர்கள்?*

**ப:** அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிற்சில விடயதானங்கள்தான் 'ஒரே நாடு, ஒரே சட்டம் ' தொடர்பான ஜனாதிபதி செயலணியில் உள்ளடங்குகின்றன. எனவே, பிரதேசங்களுக்குரிய சட்டங்கள் மற்றும் கலாசாரம் சார்ந்த விடயங்கள் இதன் ஊடாக மாற்றப்படும் என நாம் நினைக்கவில்லை.

குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கென தேசவழமைச்சட்டம் ஒன்று உள்ளது. முஸ்லிம் விவகாரத்து சட்டம் உள்ளது. இவை கலாசாரத்துடன் தொடர்புபட்டவை. எனினும், இவ்வாறான சட்டங்களில் பொதுவிடயங்களுக்கு சிக்கல்கள் இருப்பின் மாத்திரமே திருத்தங்கள் செய்யப்படும். உதாரணமாக திருமணம் முடிப்பதற்கான வயதெல்லை என்பன பொதுவான சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். இவ்வாறான விடயங்களைத்தவிர இனங்களை பாதிக்கும் விதத்திலான நடவடிக்கைகள் இடம்பெறும் என நாம் நம்பவில்லை. தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள அரசும் முற்படாது.

**கே:** நல்லாட்சி அரசின் காலத்தில் இந்தப் பணியகம் ஊடாக முன்னெடுக்கப்பட்ட பணிகள் தற்போது அதே வேகத்தில் முன்னெடுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் தமிழ் மக்களிடையே உண்டு. அதனை எப்படி பூர்த்தி செய்யப்போகின்றீர்கள்?




தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்...

**ப:** அது உண்மைதான். கொவிட் பிரச்சினையால் சுகாதாரத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. நிதிகளும் ஒதுக்கப்பட்டன. இதனால் ஈராண்டுகள் வரை பணிகள் வேகமாக இடம்பெறவில்லை. எனினும், தற்போது நிலைமை மாறியுள்ளது. வழமைபோல செயற்பட ஆரம்பித்துள்ளோம்.

இம்மதம் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை நீதி அமைச்சால் வடக்கு- கிழக்கில் நடமாடும் சேவையை முன்னெடுக்கப்படுகின்றது. இழப்பீடுகளை வழங்குவதில் உள்ள குறைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும், காணிப் பிரச்சினையிலுள்ள குறைகளும் தீர்க்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கனகசபை
## விஜயரெத்தினம்
## (ஞானம்)



**உரிமையாளர் - கண்ணன்பெயின்ற் ஞானம் பெயின்ற்**

இல்லறம் என்னும் இன்பத்தை இனிதே வழி நடத்தி
இறைவனடி சேர்ந்து ஈரைந்து வருடங்கள் -ஓடி
மறைந்து விட்டது.

அன்போடு பாசம் பண்பு கல்வி
எல்லாவற்றையும் தந்து - எங்களை
நல்வாழ்வு வாழ வழி வகுத்த - எங்கள்
அன்புத் தெய்வமே - அப்பா
நிலையாக எங்கள் நெஞ்சமதில் நின்று
ஏற்றமுடன் நாம் வாழ - ஏணியாக
நின்றிடுவீர்கள் அப்பா
காலங்கள் பல சென்றாலும் - எம்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் - எம்
நெஞ்சை விட்டகலாது

**உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.**

(CR 37382 (3/6)

தோற்றம்
21.02.1953

மறைவு
24.01.2012

ஞானம் பெயின்ற்
558 மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்

குடும்பத்தினர்
விஜய் மஹால்
பழைய தபார் கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு,

உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி நாராயணசாமி தவமணி



யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை பிறப்பிடமாகவும், இல.132 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தினை நிரந்தர வதிவிடமாகவும் 36/4 முருகமூர்த்தி லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாராயணசாமி தவமணி 22.01.2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் - பாலாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சாமிநாதப்பத்தர் - பொன்னம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற நாராயண சாமியின் அன்பு மனைவியும், சண்முகராஜா, சேதுராமன், விஜயலட்சுமி, வீரலட்சுமி, யோகேந்திரன், காலஞ்சென்ற தர்மராஜா, லோகநாதன், குலேந்திரன் (London) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்பு மருமகனான தவராசசிங்கம் மற்றும் மருமக்களான விமலாதேவி, செல்வேந்திராதேவி, கௌரி, சறோஜினி, கலாரஜனி (London) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதர்சனா, நிலக்சன், தனுஜன், கம்சனா, நதுசன், மதுசன், மோனிகா, மயூரிகா, ஜதீசன், தீவாத் கரீஸ்சன், யுதேவ் சபரீஸ் ஆகியோரின் பேர்த்தியும், மிதுர்சனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 36/4, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 500 2249
077 086 9383

(cs.42405) (2.6)


பிறப்பு
27.06.1932

இறப்பு
22.01.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26.06.1961

மறைவு 09.01.2022

கடந்த 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது நண்பர்

**அமரர் இராமகிருஸ்ணன் மகேந்திரன் (ஆச்சாரி)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
நண்பர்கள்
சன்மார்க்க மகாவித்தியாலயம்

(CS 42394) (3.6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 02 . 1936

இறப்பு 22 . 01 . 2022

**அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ். கந்தரோடையை நிரந்தர வசிப்பிடமாகவும், மட்டக்களப்பினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நேற்றுமுன்தினம் (22.01.2022) சனிக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் தம்பிஜயா செல்லம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்ற செல்லையா அமிர்தலிங்கம் (இளைப்பாறிய தாபல் அதிபர் - காங்கேசன்துறை), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற Dr. நடராசா மற்றும் மகேஸ்வரி, மனோன்மணி, பாலயோகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபத்திரா (திருச்சி - இந்தியா), பாஸ்கரன் (அவுஸ்ரேலியா), பிரபாகரன் (மும்பை - இந்தியா), காலஞ்சென்ற கருணாகரன் (கந்தரோடை, கனடா), பிரியதர்ஷினி (மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானச்சந்திரன் (இந்தியா - திருச்சி), மதிவதனி (அவுஸ்ரேலியா), வசந்தி (இந்தியா - மும்பை), சுமதி (கனடா), Dr. கௌரிகாந்தன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஷோபனா (U.K), நிலுஷா (U.S.A), Dr. ரதேசன் (அவுஸ்ரேலியா), Dr. அஞ்சனா (அவுஸ்ரேலியா), Dr. நவீனா (ஜோர்ஜியா), துஷ்யந் (இந்தியா - மும்பை), ஹரீந்திரா (கனடா), கார்த்திக் (கனடா), ஷசின் (அவுஸ்ரேலியா), பிருத்திகா (அவுஸ்ரேலியா), ஆஷா விபூதினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இலக்கம் 561 / 104, திருகோணமலை வீதி, மட்டக்களப்பில் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது.

தொடர்பு: 077 005 4323,
0091 9869 056189

தகவல்:
குடும்பத்தினர்

(cs42404) (2.6)

# சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 24

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரத்தில் நேற்றுமுன்தினம் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. 11 வயது சிறுவன் ஒருவன் தண்ணீர் அருந்துவதற்காக தனது சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு நண்பரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

நீர் அருந்திவிட்டு மீண்டும் சைக்கிளை வந்து பார்த்த வேளை சைக்கிளின் பூட்டு உடைக்கப்பட்டு சைக்கிள் திருடப்பட்டது தெரியவந்தது. சைக்கிளைத் தேடிச் சென்ற பொழுது வீதியின் ஓரமாக சிறுவனின் புத்தகங்கள் எறியப்பட்டிருந்த நிலையில் இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-125)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம்
முத்தையா
ஐயாத்துரை
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

தோற்றம் 15 . 08 . 1932

மறைவு 14 . 01 . 2001

ஆண்டுகள் இருபத்தொன்று ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்!
இன்று வேண்டித் துதித்தே இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

9/1, சுப்ரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(cs.42350) (2.6)

குடும்பத்தினர்


## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2021 ஆம் ஆண்டு 01.01.2021 முதல் 31.03.2021 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2022ஆம் ஆண்டு பெப்பவரி மாதம் 28 ஆம் திகதி (28.02.2022) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியா விட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 28.02.2022 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 2021 ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் முதல் 2021 03ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல.370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900311

உரிமையாளர்
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5046

(CR 37419) (3/6)


## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.12.2021 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவி

**குணரத்தினம் இராஜேஸ்வரி**

அவர்களின் இறுதி கிரியையில் கலந்துகொண்டோருக்கும், அனுதாபங்கள்ள தெரிவித் தோருக்கும், தொலைபேசி ஊடாக துயர் பகிர்ந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் மூலம் தமது அனுதாபத்தை வெளிப்படுத்தி யோருக்கும், போசனம் அளித்து உதவியோருக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொள்வதுடன். இன்று (24.01.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை.

(cs.42390) (2.6)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற லிகிதர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

சுன்னாகம் பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயில்வாகனம் கடந்த (21.01.2022) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசையா - கனகம்மா தம்பதியரின் மருமகனும், குகனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ரமேஸ்கண்ணா, சுரேஸ்பிரபுராம், ஹரிபிரசாத், கல்பனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கார்த்திகா, ஞானகலா, சயந்தன் ஆகியோரின் மாமனாரும், மிதுசா, வர்ஷா, ஜருஷா ஆகியோரின் பேரனும், சிவகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி), மகேஸ்வரி, புவனேஸ்வரி, கோபாலகிருஸ்ணன், நடராஜா, விக்னேஸ்வரன், இராசமணி, ஜெசிறிபவன் ஆகியோரின் சகோதரரும், தியாகராஜா, சுகுணா, சரோஜாதேவி, புவனேந்திரன், ரதி, ரஜனி, ராகினி ஆகியோரின் மைத்துனரும், கைலைநாதன், ஜெயசுதா, சுதா, கார்த்தீபன், பாமினி, தமிழினி ஆகியோரின் மாமனாரும், ஜெனகா, அஜித், சயந்தி, வினுசன், வினுசியா, மீரா, சூர்யா, அபிராமி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரர்கள்**
**நடராசா (ஜேர்மன் - 0049 2131 669 804)**
**விக்கினேஸ்வரன் (ஜேர்மன் - 0049 2161 478656)**
**புவாராஜி - 0041 5521 06321)**
**0041 7865 74425**
**கோபாலகிருஸ்ணன் - 0094 7794 89734**

**பருத்திக்கலட்டி,**
**சுன்னாகம்.**

(cs.42409) (2.6)

# மரண அறிவித்தல்



மண்ணில் 08.04.1950
விண்ணில் 23.01.2022

## திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி

கைதடி நாவற்குழி, கைதடியை (மறவன்புலவு) பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் வெள்ளவத்தையை (கொழும்பு) தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான SK ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், விஜயகுமார்(ஜேர்மனி), வினோதினி (ஆசிரியர், கிளி/பூநகரி மத்திய கல்லூரி), விக்னகரன் (UK) விஜிந்தினி (இலங்கை மத்திய வங்கி) விஜயரதனி (ஆசிரியர், யா/சாவகச் சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியபாமா (ஜேர்மனி), செல்வகுமார் (வர்த்தக முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), தனுஜா (UK), பிரபாகரன் (Senior Accountant, Finacedirect), மதிராஜ் (ஆசிரியர், யா/வரணி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், தங்கம்மா, பொன்னையா, சாந்தநாயகி, பஞ்சரத்தினம், ஸ்ரீகாந்தன் மற்றும் சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்க ளான மனோன்மணி, திருஞானசக்தி, இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் விஜேழினி, விதுசினி, விபூசினி, வினுஷன், விதுஷிகன், திஷானன், மேஹாசினி, கிருஷிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியு மாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (24.01.2022) திங்கட்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26.01.2022 புதன்கிழமை இறுதிக்கிரியைகள் கைதடி நாவற்குழி, கைதடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணிக்கு நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலவு தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**கைதடி நாவற்குழி, கைதடி.**
**021 205 0953**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு...

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழர் தரப்பின் பிரச்சினைகளைச் செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் இலங்கை அரசுக்கு உள்ளது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் தமிழர் தரப்பு இந்தியாவுடன் தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகின்றது.

இன்று சீனா, ஜப்பான் ஒருபக்கம் பலமடைந்து வருகின்ற நிலையில், அமெரிக்கா தலைமையில் இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கூட்டணி உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்தப் போட்டியில் இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது. இதில் தமிழர் தரப்பின் நகர்வுகள் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வெவ்வேறு நாடுகளுடன் நாம் பகுதி பகுதியாக இணைய நினைப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல.

நாடாக ஒரே கொள்கையில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்காக முதலில் தேசிய மட்டத்தில் சகல தரப்பையும் ஒன்றிணைத்துப் பேச்சை முன்னெடுக்க வேண்டும். தமிழர் தரப்பின் பிரச்சினைகளைச் செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இனியும் தவறான கொள்கையில் அரசு பயணித்தால் ஒட்டுமொத்த நாடுமே அதல பாதாளத்தில் விழும்-என்றார். (எ-22)

## பூஸ்டர்...

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது நாட்டின் அனைத்துச் செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன. நாட்டில் ஒமிக்ரோன் திரிபுத் தொற்று பரவி வரும் நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் அந்தத் திரிபு பரவுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுகின்றன.

அதனால் அனைவரும் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது அவசியம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 30 வீதமானோரே பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளனர்.

எதிர்வரும் 31ஆம் திகதி முதல் தடுப்பூசி வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அனைவரும் பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும். - என்றார். (எ-20)

## தமிழரின்...

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டே தீரும். தமிழர் பிரதிநிதிகளையும் எமது அரசில் இணைத்துப் பயணிப்போம்.

ராஜபக்ச அரசு தமிழ் மக்களைப் புறக்கணித்து அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் இருந்தமையால்தான் நாடு இன்று சர்வதேசத்திடம் மண்டியிட வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராகக் குற்றங்களை இழைத்த ராஜபக்ச அரசு, அதற்கான பொறுப்பை ஏற்றுப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் வழங்கியிருந்தால் இலங்கை விவகாரத்தில் ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் தலையிட்டிருக்க வேண்டிய நிலை வந்திருக்க மாட்டாது-என்றார். (எ-22)

## கஞ்சாவுடன்...

இருந்து ஆயிரத்து 250 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் அதேபகுதியைச் சேர்ந்த 27 வயதானவர் என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## முன்னாள்...

பொது மருத்துவமனையின் கொரோனாச் சிகிச்சைப் பிரிவின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவருக்கு வயது74 அவரது இறுதிச் சடங்குகள் கொரோனாத் தடுப்புச் சட்டத்தின்படி நடைபெறும் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-இ)

## மக்களின்...

யாதைக்குத் துரோகம் இழைத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் தொகுதி தலைமை அலுவலக திறப்பு விழா நேற்று மொரவகவில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இலங்கை மத்திய வங்கி 1.4 லட்சம் கோடி ரூபாவை அச்சிட்டுள்ளது. வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தன்னிச்சையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிகளவு பணம் அச்சிடப்படுவதால் பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் பண வீக்கம் அதிகமாக இருக்கும். இது தொடர்பாக ஆரம்பம் முதலே அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தபோதும், அரசாங்கம் அதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒருகிலோ அரிசியின் விலை மிக விரைவில் 200 முதல் 300 ரூபாவை எட்டலாம். மக்களை அநாதைகளாக்கியுள்ள இந்த யுகம் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். - என்றார். (எ-இ)

## கரண்ட்...

தெரிவித்தன.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால், எரிபொருள் கையிருப்பு மற்றும் நீர் நிலைகளின் நீர்மட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் மின் துண்டிப்பு தவிர்க்க முடியாது என்று தெரிவித்தார். நீர்மின் நிலையங்கள் தற்போது முழுக் கொள்ளளவுடன் இயங்கிவருவதால் எதிர்காலத்தில் பயிர்ச்செய்கை மற்றும் குடிதண்ணீர் வழங்கல் என்பவற்றில் நெருக்கடி ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் பதில் பொதுமுகாமையாளர் கலாநிதி சுசந்த பெரேரா, உராய்வு எண்ணெய் மற்றும் டீசல் ஆகிவற்றைப் பெற்றுக்கொள்வதில் உள்ள நெருக்கடி காரணமாக நாளை (இன்று) முதல் இரவு வேளைகளில் நாடு தழுவிய ரீதியில் கட்டம் கட்டமாக மின் துண்டிப்பு ஏற்படும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை காரணமாக நாட்டில் உள்ள பெரும்பாலான அனல் மின் உற்பத்தி நிலையங்களின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் நாளை (இன்று) முதல் 183 மெகாவாட்ஸ் மின் உற்பத்தியை தேசிய மின் உற்பத்திக் கட்டமைப்பில் இணைத்துக்கொள்ள முடியாத நிலைமை காணப்படும்.

நாடளாவிய ரீதியில் கட்டம் கட்டமாக மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படும். மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படும் முறைமை மற்றும் நேரம் ஆகிய விடயங்கள் நாளை (இன்று) அறிவிக்கப்படும்.- என்றார். (எ-இ)

## பால்மாவுக்கு...

போதியளவு டொலர் வழங்கப்பட்டுள்ளதால் பால் மா இறக்குமதி சீராக நடைபெறும் என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஆயினும், சந்தையில் பால்மாவைப் பெற்றுக்கொள்வதில் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். (எ-இ)

## பிள்ளையார்...

கர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள், அந்தப் பகுதியால் பயணத்தில் ஈடுபடும் மக்கள் பிள்ளையாரை வழிபட்டுச் செல்வது வழமை என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், பிள்ளையார் சிலை திடீரெனக் காணாமற் போயுள்ளது. இனந்தெரியாதவர்கள் பிள்ளையார் சிலையை அகற்றியுள்ளனர் என்றும், இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (எ-18)



# பொங்கல் கலைவிழா

யாழ்ப்பாணம், ஜன. 24

சுழிபுரம் மேற்கு, கலைமகள் சனசமூக நிலையத்தின் பொங்கல் கலைவிழா, நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு கலைமகள் கலையரங்கில் இடம்பெற்றது.

நிகழ்வில், தமிழர்களின் பாரம்பரிய கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கலைமகள் முன்பள்ளி, கலைமகள் இலவசக்கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் "அந்த காலமா இந்த காலமா" என்ற விவாதமும் விருந்தினர்களைக் கௌரவித்தலும் இடம்பெற்றன.

நிகழ்வில், சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் ஜீவராஜா, சுழிபுரம் மத்தி கிராம அலுவலர் பிரதீப், அகில இலங்கை சமாதான நீதிவான் கௌதமன், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-ரி1,125)



# கௌரவிப்பு

சாவகச்சேரி, ஜன. 24

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் 'ஹப்பன்' சிறப்பு கணக்கு வைத்திருந்த புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு, சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில், மாணவர்களுக்கு ஹப்பன் புலமைப்பரிசிலுக்கான பரிசில்களை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ஹலீம் வழங்கிக் கௌரவித்தார்.

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அப்புத்துரை கெங்காதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளர் நடராஜர் பகீரதன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் முகுந்தன் லலிதாமலர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-ரி1,50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களை அழிக்கும் சர்வாதிகார ஆட்சி

## சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு.ஜன.24
தற்போதைய சர்வாதிகார ஆட்சியில், ஒட்டுமொத்த விவசாயிக ளும் அநாதையாக்கப்பட்டுள்ளனர். மக்களை அழிக்கவே இந்த அரசு ஆட்சிபீடம் ஏறியுள்ளது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேம தாஸ தெரிவித்தார்.
விசுத்தாராம விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலைக் கட்டடத்தைத் திறக்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள விவசாயிகளைவிட வெளிநாட்டில் உள்ள விவசாயி கள் இந்த அரசுக்கு விசேடமானவர்களாகி விட்டனர். மக்களிடம் பணம் பறித்து, கப்பம் பெறும் நிலைக்கு வந்துள்ளனர். நுகர்வுப் பொருள்களின் விலை தன்னிச்சையாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இதற்கும் அரசு பொறுப்பல்ல என்பது போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கும் இந்த அரசு ஊழல் நிறைந்ததாக மாறியுள்ளது-என்றார்.
(ஒ-4.இ)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.24
வட்டுக்கோட்டை, உடுக்கியவளை ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் கோவிலில் கும்பாபி ஷேக தினத்தை முன்னிட்டு 1008 சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.
ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ வெ.கஜராஜசர்மாவின் தலைமையில் நாளை 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் ஆலயத்தில் சங்காபிஷேம் இடம்பெறவுள்ளது.
அடியவர்களை சுகாதார விதிமுறைகளுடன் கலந்துகொண்டு இறையருளைப் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.
(ச)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கு கணினி, ஆங்கில கற்கைநெறிகள்
புதிய பிரிவு ஆரம்பம்
26/1/2022 Wed 3:30 pm
29/1/2022 Sat 9 am/3pm
DMI COMPUTER EDUCATION
0777 173517
Junior Diploma in Computer Science
Windows, MS Office, IT
Micro:bit, Robotics,
Coding for kids
Mathematical Games
Spoken English For KIDS
Grammar, Reading, Writing, Listening, Speaking
School + Cambridge Curriculum
பதிவுகளுக்கு உங்கள் பெயரை 0777 173517 என்ற இலக்கத்துக்கு SMS or viber or whatsApp செய்யுங்கள்
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, 0777 24 07 07 021 222 4403
021 226 2470 0777577333 | 021 227 0775 0777227074 | 021 224 1970 0776032300 | 021 225 6665 0761354503 | 021 228 5655 0776398096

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 10 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல்.
1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்.
**076 890 9259, 077 015 0353**
(CS 1265) 1

# தேவை

நல்லூரில் இயங்கும் JAS Fashion
பெண்களுக்கான ஆடை விற்பனை நிலையத்திற்கு
பெண் விற்பனையாளர்கள் பெண் காசாளர்
உடன் தேவை.18 -35 வயதிற்குட்பட்டவர்கள் தேவை.
**076 3365 885, 077 1166 090**
(cs.42410) (2.6)

# விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் சேவை 3-5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன
Lanka Cargo Worldwide Expeross



315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**076 283 2397**
(பணியாளர்கள் தேவை)
(CS 1173) 1-6

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
**தொடர்பு: 077 814 7389, 077 614 7333**

# விவசாயிகள்கௌரவிப்பு

மன்னார் மாவட்ட செயலகத்தின் அலுவலகர் நலன்புரி சங்கத்தினரால் வருடந்தோறும்நடத்தப்படும் உழவர் கௌரவிப்பு விழா நேற்று இடம்பெற்றது.
நஞ்சற்ற இயற்கைப் பசளை மூலம் விவசாயத் தைக் மேற்கொண்டு உற்பத்தியில் ஈடுபட்ட, சிறந்த விவசாயிகள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.
மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் விவசாயிகளைக் கௌரவித்தார்.
மடு பிரதேச செயலர் பிரிவில் ம.ஜோண் குணசீலன், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஆரோக்கியம் எஸ்தாக்கி பிகிறாடோ, நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில்ஏ.செபஸ்ரியம்மா, முசலி பிரதேச செயலர் பிரிவில் சேகு முகமட் எஹியாகான், மன்னார் பிரதேச செயலர் பிரிவில் வைத்திலிங்கம் மகேந்திரன் ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர்.
(ஒ-4.60)

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 20 பரப்புக் காணி 2 பரப்பாகவும். 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. நல்ல சூழல் வீடு அமைப்பதற்கு உகந்தது.
(நிலபரப்பு 24 அடிப்பாதையுடன்).
பலாலி வீதியிலிருந்து 500m தூரம்.
**தொடர்பு: 077 6585 999**
(CS 1298) 1-6



# வேலைவாய்ப்பு

யாழ்ப்புபாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**வரவேற்பாளர்**
தகைமை
- க.பொ.த. உயர்தரம் சித்தி

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**
தகைமை
- க.பொ.த. உயர்தரம் சித்தி

**கிராபிக் டிசைனர் (Graphics Designer)**
தகைமைகள்
- Photoshop மற்றும் கிராபிக் மென்பொருளில் அனுபவம்.
- பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.



ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன்
24.01.2022 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிமுதல்
ந.ப 12 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

**உதயன் பத்திரிகை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

# பிரேரணைகள்

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதியளவில் நடைபெற இருப்பதனால் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கவிரும்புவோர் பிரேரணைகளை எதிர்வரும் 10.02.2022 ஆம் திகதிக்குமுன் சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தலைவர், செயலாளர்,
பரிபாலனசபை
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நந்தாவில் கொக்குவில்.
(cs.42407) (2.6)

# குருக்கள் தேவை

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
மேற்படி ஆலயத்தில் நித்திய நைமித்திய பூயைகளை ஆற்றுவதற்குப் பிராமண குலத்தைச் சேர்ந்த குருக்கள் தேவை. தங்குவதற்கு வீடு வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுதிகதி: 31.01.2022
விண்ணப்பிக்க வேண்டி முகவரி:
தலைவர், செயலாளர், பரிபாலனசபை கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம். நந்தாவில் கொக்குவில்.
(cs.42406) (2.6)

# யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக்கலை, உணவுகள் தயாரித்தல் பயிற்சிகளின் 2021ம் ஆண்டு மாணவிகளின் பரீட்சைகளுக்காக இடைநிறுத்தப்பட் டிருந்த கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன.
பதிவுகளை மேற்கொண்டிருந்தவர்களும், புதிதாக கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக்கலை, உணவுகள் தயாரித்தல் ஆகிய பயிற்சிகளில் சேர விரும்புவர்களும் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரில் வந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். -இயக்குநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.